**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC-110/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Dr. கார்த்திகேயன் | Prosecution | LW- 7 as PW -6 |
| Father Name | | Defence | |
| Village | | Taluk | |
| Calling | | Age | /2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**03.07.2025 எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது குன்னம் அரசு மருத்துவமனையில் மூத்த உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் சீர்காழி அரசு மருத்துவமனையில் 11.03.2022 அன்று பணியில் இருந்த போது, மாலை 5.10 மணி அளவில் ஐஸ்வர்யா என்கிற நபர் சிகிச்சைக்காக அவருடைய தந்தை சிவபாத சேகரன் என்பவரால் அழைத்துவரப்பட்டார். அவரை பரிசோதனை செய்தபோது, 11.03.2022 மதியம் 2.30 மணி அளவில் தன் வீட்டில் தெரிந்த நபர்கள் இரண்டு பேர் கைகளாலும், கட்டையாலும் தாக்கியதாக தகவல் கூறினார். அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் கிழிந்த காயம் ஆகும். அவருக்கு இடது பக்க தலையில் 4*3*2 cm அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. அவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டு, உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருடைய தலைக்கு CT Scan மற்றும் Normal Scan எடுக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் 'சாதாரண காயம்' என்று நான் சான்று வழங்கினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் காய சான்றிதழ் நான் வழங்கியதுதான். (மேற்படி காய சான்றிதழ் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவம் 2.30 மணிக்கு நடைபெற்றதாக எனக்கு சொல்லப்பட்டது என்றால் சரிதான். ஐஸ்வர்யா என்னிடம் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை என்றாலும் தெரிந்த நபர்கள் இருவர் தாக்கியதாக மட்டுமே குறிப்பிட்டார் என்றாலும் சரிதான். ஐஸ்வர்யாவுக்கு ஏற்பட்டிருந்த காயம் பழைய காயமா அல்லது புதிய காயமா என்பது பற்றி நான் விபத்து பதிவேட்டில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஐஸ்வர்யா என்னிடம் ஏதேனும் ஆயுதத்தை அடையாளம் சொல்லி அத்தகைய ஆயுதம் கொண்டு தான் தாக்கப்பட்டதாக சொல்லி உள்ளாரா என்றால் அப்படி எதுவும் சொல்லவில்லை. ஐஸ்வர்யாவுக்கு ஏற்பட்டிருந்த காயம் அவர் கீழே தருமாறு விழுந்ததால் கூட ஏற்பட்டிருக்க கூடும் என்றால் சரிதான். இந்திரா காந்தி என்பவர் மருத்துவமனையில் அன்றைய தினம் சிகிச்சையில் சேர்க்கப்பட்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.